மொறட்டுவ மாநகர சபை - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மொறட்டுவ மாநகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அதிகாரம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மொறட்டுவ மாநகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதை கணக்கீட்டு கொள்கைக் கூற்றின் 2.1 இன் கீழ் காண்பிக்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல், சொத்துக்கள் பெறுமானத் தேய்வு செய்தல் மற்றும் ஆண்டின் மூலதன மாணியப் பெறுவனவுகளை வருமானத்திற்கு இனங்காணல் நியமத்தின் பிரகாரம் மேற்கொள்ளப் படவில்லை.	எதிர்காலத்தில் மீள் மதிப்பீடு சொத்துக்களைக் கணக்கீடு செய்வதற்கும் பெறுமானத் தேய்வை கணக்கீடு செய்வதற்கும் கட்டிடம் மற்றும் வாகனங்களும் சரியாக இனங்கண்டு மீள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.	நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.29 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் விற்பனையில் இருந்து கிடைத்த பணம் ரூபா 2,454,550 காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளில் இருந்தான காசுப் பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் இவ்வாறான வழுக்கள் ஏற்படாமல் இருப்பதற்கு குறிப்பிடுகின்றோம்.	நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
கிரயம் ரூபா 4,305,365 ஆன 3 வாகனங்கள் மற்றும் நிலையான சொத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்படாது இருந்த கல் உருளை மீளாய்வாண்டில் விற்றுத் தீர்க்கப்பட்ட போதும் அதற்கான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	2025 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	விற்றுத் தீர்க்கப்பட்ட சொத்துக்கள் சரியாகக் கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
02 கணக்கு விடயங்களின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரமான மீதி ரூபா 66,035,106 ஆக இருந்த போதிலும் அதற்குரிய பட்டோலைகளின் பிரகாரம் மீதி ரூபா 62,588,162 ஆனமையால் ரூபா 3,446,944 இணக்கம் செய்யப்படாத வேறுபாடு காணப்பட்டது.	2021 ஆம் ஆண்டில் ஊழியர் கடன் கட்டுப்பாட்டுக் கணக்கில் இணக்கம் செய்யப்படாத ரூபா 3,143,089 வேறுபாடு குறித்துரைத்த ரீதியில் பேணிச் சென்று எதிர்காலத்தில் பட்டோலைகளின் பிரகாரம் இணக்கம் செய்யும் வகையில் கணக்குகள் சரியாக பேணிச் செல்வதற்கும் மத்திய சந்தையின் கடை வாடகைக் கணக்கை சமப்படுத்துவதற்காக பதிவளிக்கும் மீதியாக சேர்க்கப்பட்டுள்ளது.	வேறுபாட்டுக்கான காரணங்களை கண்டறிந்து சரி செய்தல் வேண்டும்.

1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
நாளதுவரையாக்கப்பட்ட சொத்துக்கள் பதிவேடு, காலப் பகுப்பாய்வு, விரிவான பட்டோலை, மீதி உறுதிப்படுத்தல் மற்றும் பௌதீக இருப்புக்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 91,528,136 ஆன 09 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ மற்றும் ஏற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது.	04 மீதிகளை தீர்த்து வைக்கப்பட்டுள்ளதுடன் 02 மீதிகளைப் பதிவளிப்பதற்கான அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையும் 02 மீதிகள் பட்டோலைகளைக் கண்டறிய முடியாதுள்ளது.	கணக்காய்விற்கு சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்			
(i) நிதிப்பிரமாணம் 104(4)	சபைக்குச் சொந்தமான 07 வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்துக்கள் 03 மாதங்கள்	பதிலளிக்கப்பட வில்லை.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை

		கடப்பதற்கு முன் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		எடுத்தல் வேண்டும்.
(ii)	நிதிப்பிரமாணம் 156	2003 முதல் 2015 ஆம் ஆண்டு வரை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு அறிக்கை மற்றும் பங்களிப்புப் பணம் அனுப்புதலின் தாமதத்தின் அடிப்படையில் ரூபா 1,549,200 மிகைக் கட்டணம் செலுத்தும் பொறுப்பு ஒன்று சபைக்கு எழுந்திருந்ததுடன் அந்த தொகைக்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்பட வில்லை.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	நிதிப்பிரமாணம் 156	சபைக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கிற்காக 2018 யூலை 20 ஆந் திகதி வழங்கப்பட்ட நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் முறைப்பாட்டாளருக்கு இழப்பீட்டுப் பணம் மற்றும் வழக்குக் கட்டணமாக சபையால் செலுத்தப்பட்ட ரூபா 11,602,318 இனை அதற்குப் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	பதிலளிக்கப்பட வில்லை.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iv)	நிதிப்பிரமாணம் 486(i)	1998 முதல் 2003 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்குரிய பெறுமதி ரூபா 491,288 ஆன மதிப்பிழந்த 86 காசோலைகளில் இருந்து எந்த ஒரு தொகையும் மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்பட வில்லை.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(v)	நிதிப்பிரமாணம் 1653	35 வாகனங்களின் மைலோ மீற்றர் செயலிழந்து காணப்பட்டது.	பதிலளிக்கப்பட வில்லை.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	2017 நவம்பர் 07 ஆந் திகதிய இலக்கம் 22/99 (xxxiii) என்ற அரச நிர்வாக சுற்றறிக்கை மற்றும் மேல் மாகாண ஆளுநரின் செயலாளரின் 2018 சனவரி 12 ஆம் திகதிய இலக்கம் GOS/ADM/02/19/02/2018 என்ற கடிதம்	நிர்வாக உத்தியோகத்தருக்கு போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக தனிப்பட்ட வாகன வசதிகள் வழங்கப்பட்டிருந்தது.	பதிலளிக்கப்பட வில்லை.	சுற்றறிக்கை மற்றும் கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய இலக்கம் 09/2009 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் (iv) ஆம் பந்தி	சபையின் திட்டமிடல் குழுவின் கூட்டங்களுக்காக வருகை தரல் மற்றும் வெளிச் செல்லல் கைவிரல் அடையாள இயந்திரம் உறுதிப்படுத்தப்படாமல் வருகைப் பதிவேட்டை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு படிகள் செலுத்தப்பட்டிருந்தது. 2024 ஏப்ரல் முதல் ஆகஸ்ட் மாதம் வரை கூட்டத்திற்கு பங்குபற்றிய 05 உத்தியோகத்தர்களுக்காக கைவிரல் அடையாள இயந்திரம் இல்லாத 50 சந்தர்ப்பங்களுக்காக ரூபா 125,000 படி செலுத்தப்பட்டிருந்தது.	பதிலளிக்கப்பட வில்லை.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.8 போதியளவான அதிகாரப் பலத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அதிகாரம்) 188(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபை நிதியத்தில் கொடுப்பனவு செய்ய முடியாத சபையின் 27 அங்கத்தவர்களுக்காக திடீர் விபத்துக்கள் மற்றும் சுகாதார காப்புறுதிக்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது சபை நிதியத்தில் இருந்து முறையே ரூபா 953,715 மற்றும் ரூபா 1,086,807 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 2,040,522 செலுத்தப்பட்டிருந்த போதிலும் சபைக்கு அறவிட வேண்டிய ரூபா 1,703,022 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது இருந்ததுடன் பெற வேண்டிய மீதியாக கணக்கீடும் செய்யப் பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	சபைக்கு அறவிட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	இலக்கம் 05/2013 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கை மூலம் இதுவரை சாரதிகளுக்கும் அலுவலக உதவியாளர் சேவையில் உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்ட சீருடைகள் மற்றும் தையல் கூலிக்காக 2013 சனவரி 01 ஆந் திகதி முதல் அமுல்படும் வகையில் வருடாந்தம் ரூபா 4,000 படி ஒன்று செலுத்த வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் அது சுற்றறிக்கைக்கு முரணாக 2022 செப்தெம்பர் 01 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த சபைக் கூட்டத்தின் போது நிறுவனப் பதவியணியினருக்கு சீருடைகள் விநியோகிப்பதற்காக ரூபா 5,000 தொகை வழங்குவதற்கு தீர்மானித்து 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 3,515,000 மற்றும் 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 3,390,000 செலுத்தப்பட்டிருந்தது.	பதிலளிக்கப்படவில்லை.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 182,652,319 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 67,100,827 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

நகர ஆணையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000
i.	ஆதன வரியும் வரியும்	214000,	214,534	231,225	290,731	213,520	211,281	142,595	300,320
ii.	வாடகை	18,228	16,032	12,742	3,289	10,090	13,969	11,958	2,011
iii.	அனுமதிப்பத் திரக் கட்டணம்	9,000	7,518	7,502	16	9,000	6,861	6,790	71
iv.	ஏனைய வருமானம்	1,500	-	8,041	-	1,500	6,087	6,087	-
	மொத்தம்	242,728	238,084	259,510	294,036	234,110	238,198	167,430	302,402

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	**வீதவரியும் வரியும்** மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 252(1)(அ) மற்றும் (ஆ) பிரிவுகளின் பிரகாரம் ஆதனவரி மற்றும் வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மற்றும் வரி மீதி ரூபா 290,730,807 ஆக இருந்ததுடன் அதில் நிலுவை ஆதனவரி பெறுமதி ரூபா 50,000 ஐ விஞ்சிய 318 ஆதனவரி அலகுகளில் இருந்து அறவிட வேண்டிய தொகை ரூபா 87,909,603 ஆகும்.	பெறுமதி ரூபா 50,000 இனை விஞ்சிய 33 ஆதனவரி அலகுகளின் நிலுவைப் பணம் மற்றும் 64 அலகுகளின் நிலுவை பணத்தில் ஒரு பகுதியும் மொத்த பெறுமதி ரூபா 15,612,833 நிலுவை சேகரிக்கப்பட்டுள்ளது.	நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2024 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 300,320,232 நிலுவை ஆதனவரி மற்றும் வரி மீதியில் ரூபா 81,186,072 அதாவது 27 சதவீதம் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 219,134,160 அதாவது 73 சதவீதத்தை அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது.	வருமானப் பரிசோதர்கள் மற்றும் ஆதனங்களை தடை செய்யும் உத்தியோகத்தர்கள் மூலம் ஆதனவரி சேகரிப்பதற்காக நடமாடும் சேவை மூலம் ஆதனவரிப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	245 அரச நிறுவனங்களில் இருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனவரியாக ரூபா 44,636,263 கிடைக்க வேண்டி இருந்ததுடன் ரூபா 1,000,000 ஐ விஞ்சிய நிலுவை ஆதனவரி உடன் 10 அரசாங்க நிறுவனங்களில் இருந்து கிடைக்க வேண்டிய தொகை ரூபா 40,479,202 ஆகும்.	மேலும் காணப்படுகின்ற நிலுவை ஆதனவரி பணத் தொகையை அறவிடுவதற்கு மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.	நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	2024 சனவரி 01 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 62,604,717 கழிவுப் பொருள் வரி நிலுவையில் மீளாய்வாண்டில் ரூபா 3,817,140 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபை அதிகாரப் பிரதேசத்தில் இலகு கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக கிடைக்க வேண்டிய ரூப 68,688,457 கழிவுப் பொருள் வரி வருமானத்தில் உள்ளடக்கி 10 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய ரூபா 7,819,040 அறவிடுவதற்கு சபையினால் உரிய	பதிலளிக்கப்படவில்லை.	நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.		

2.2.3 வூடகை

(அ)	மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அதிகாரம்) 254 (அ) 1 மற்றும் 2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நீண்ட கால ரீதியில் வாடகை செலுத்துகின்ற 145 ஆதனங்களில் இருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை மீதி ரூபா 6,854,837 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	ஆதனங்களை விரைவாக வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	சபைக்கு சொந்தமான வாடகைக்கு வழங்கப்படுகின்ற 282 ஆதனங்களுக்கு இடையே 22 ஆதனங்களை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	நீண்ட கால ரீதியில் வாடகைக்கு வழங்கப்படுகின்ற 45 ஆதனங்களில் இருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 10 தவணைகளுக்கு மேற்பட்ட நிலுவையாக இருந்த ரூபா 4,071,724 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 290 கடைகளில் இருந்து அறவிட வேண்டிய நிலுவை கடை வாடகை வருமானம் ரூபா 6,854,837 ஆகும். 10 மாதங்களுக்கு மேற்பட்ட நிலுவை மீதி உள்ள 75 கடைகளில் இருந்து அறவிட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 5,564,827 ஆகும்.	மத்திய சந்தை நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உரிய 16 கடைகளின் நிலுவை தொகையான ரூபா 2,248,433 நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடைந்தவுடன் அறவிடுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்க முடியாது இருந்ததுடன் மீதி தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	2024 சனவரி 01 இல் உள்ளவாறு மத்திய சந்தைக் கடை நிலுவை வாடகை ரூபா 2,299,340 மற்றும் திகரொல்ல நாளாந்த சந்தைக் கட்டிடத் தொகுதியின் நிலுவைக் கடை வாடகை ரூபா 1,748,344 மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.	மத்திய சந்தையில் ரூபா 100,000 இற்கு மேற்பட்ட நிலுவை ஆதனங்களுக்கு இடையே ரூபா 705,660 இற்காக வழக்கு தொடர்ப்பட்டுள்ளதுடன் ரூபா 340,000 நிலுவை சரியாக சிட்டையிடப்பட்டுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டின் சனவரி மாதத்தில் முத்திரை வைக்கப்பட்டுள்ள 02 கடைகளுக்காக 2023 ஆம் ஆண்டில்	நிலுவை கடை வாடகை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		சிட்டையிடப்பட்டுள்ளதுடன் மேலதிகமாக சிட்டையிடப்பட்ட ரூபா 110,000 தொகை 2024 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் இருந்து அகற்றுவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.	
(ஊ)	சபைக்குரிய கடைகளுக்கு இடையே 2024 சனவரி 01 இல் உள்ளவாறு கடைகளில் இருந்து விலகிச் சென்றமை, முத்திரை வைத்தமை, கடைகள் உடைந்து விழுந்து இருந்தமை மற்றும் பழுது பார்த்தல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த முடியாமல் மூடப்பட்டுள்ள கடைகளின் எண்ணிக்கை 28 ஆக இருந்ததுடன் அறவிட முடியாதிருந்த நிலுவை கடை வாடகைத் தொகை ரூபா 786,903 ஆகும்.	03 கடைகளுக்காக வாடகையாளர்களை தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் கடைகள் மூன்று சபைத் தீர்மானத்தின் பிரகாரம் மீண்டும் வாடகைக்கு வழங்கப்படாமல் அவைகள் உடைத்து அகற்றுவதற்கும் முத்திரை வைக்கப்பட்டுள்ள கடைகளை வாடகை அடிப்படையில் வழங்குவதற்கும் கடைகளுக்காக கேள்வி கோரி சகல சந்தர்ப்பங்களிலும் எந்த ஒரு கேள்விதாரரும் முன்வராது இருந்தமையும் ஏனைய கடைகள் முத்திரை வைக்கப்பட்டுள்ளமையால் பழுது பார்த்தல் நடவடிக்கைகள் நகர பொறியியலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.	முறையானதாகக் கடைகளைப் பயன்பாட்டுக்கு எடுத்து நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(எ)	நகர சபையினால் வாடகைக்கு வழங்கப்படுகின்ற திகரொல்ல நாளாந்த சந்தைக் கடைகள் 52 இற்காக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கடை வாடகை ரூபா 1,329,255 கூட்டு மொத்தமாக இருந்ததுடன் உடன்படிக்கைக் காலத்தை விஞ்சிய கடைகளின் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே அதன் மேல் மாடியில் கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தது.	உடன்படிக்கைக் காலம் முடிவடைந்துள்ள கடைகளில் உடன்படிக்கை நாளது வரையாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.	உடன்படிக்கைகளில் கைச்சாத்து இடுவதற்கும் நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஏ)	நீண்ட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற பெறவேண்டி கடை வாடகை வருமான மீதிகள் 06 இனது கூட்டுமொத்தம் ரூபா 7,828,293 இணை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	நிலுவைக் கடை வாடகை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2.3 மிகைக் கட்டணம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கடந்த ஆண்டில் விதிக்கப்பட்டிருந்த மிகைக் கட்டணத்திற்காக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 11,847,678 அறவிட வேண்டி இருந்தது.	தற்போது உத்தியோகத்தர்கள் ஆறு பேர் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் எட்டு பேர் மரணமடைந்துள்ளதால் மிகுதி 22 பேர்களிடம் இருந்து எந்த ஒரு மிகைக் கட்டணதாரருக்கும் மிகைக் கட்டணப் பணம் செலுத்துவதற்கு இணக்கம் தெரிவிக்காது இருந்தமையால் நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம் அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 இனங்காணப்பட்ட நட்டம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
ஆதனவரி பிரிவில் கணனி சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த ஊழியரினால் பொது இரகசிய குறியீட்டைப் பயன்படுத்தி 2018 ஆம் ஆண்டில் 10 சந்தர்ப்பங்களின் போது பதவி நிலை உத்தியோகத்தருக்கு உரியதாகக் காணப்பட்ட இரகசியக் குறியீட்டையும் போலியாக பயன்படுத்தி ரூபா 105,893 பெறுமதியான சிட்டைகளை இரத்துச் செய்து ஆதனவரி மோசடி ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நட்டம் அறவிடப்பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	பாசோதனை நடாத்தி பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தருக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	நிதி மற்றும் ஊடகத் துறை அமைச்சின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதிய இலக்கம் 4/2018 என்ற சொத்துக்கள் முகாமைத்து சுற்றறிக்கையின் ஆலோசனையின் படி 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது நிறுவனத்திற்கு உரிய சகல நிலையான சொத்துக்களும் மீள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும் என உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் 2021 பெப்ரவரி 01 ஆந் திகதிய மற்றும் இலக்கம் LGD/10A/4/ந.கி/2019 என்ற கடிதத்தின் பிரகாரம் அறிவிக்கப்பட்ட போதும் மாநகர சபையினால் 2024 ஆம் ஆண்டின் போது நிலையான	பதிலளிக்கப்படவில்லை.	சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.		
(ஆ)	சபை உறுப்பினர்களிடம் இருந்து அறவிட வேண்டிய நிலுவை எரிபொருள் மீதியான ரூபா 75,000 மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு தவறியிருந்தது.	நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டிருந்த காலத்தை மேலும் நீடித்துக் கொள்வதற்கு மகர பதிவாளரால் அவர்களின் காரணங்களைக் கவனத்தில் கொண்டு அதற்கு இடமளித்து 2025.12.17 ஆந் திகதி வரை அதற்காக காலம் வழங்கபப்பட்டுள்ளது.	அறவிட வேண்டிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2019 முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்காக கிடைக்க வேண்டிய ரூபா 29,433,064 சம்பள மீளளிப்பை பெற்றுக் கொள்வதற்கு முடியாது இருந்தது.	பதிலளிக்கப்படவில்லை.	சம்பள மீளளிப்புச் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	சபைக்குரியதாகக் காணப்பட்ட கம்பெக்டர் வண்டி 1999 ஆகஸ்ட் 10 ஆந் திகதி ஏற்பட்ட விபத்து தொடர்பாக பாதிப்பு உட்பட்ட தரப்பினருக்கு ரூபா 3,001,717 செலுத்துவதற்கு விபத்துக்கு தவறிழைத்தவராக சபையின் சாரதி தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அந்த தொகை சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையில் சாரதியிடம் இருந்து ரூபா 112,205 மாத்திரம் அறவிடப்பட்டதுடன் 2021 மே 18 ஆந் திகதிய சபைத் தீர்மானத்தின் மூலம் தாபன விதிக் கோவையின் II ஆம் தொகுதியின் 2:1, 2:2 பிரிவுகளுக்கு முரணாக 2019 மார்ச் மாதம் முதல் சாரதியில் இருந்து அறவிடல் நிறுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சபைக்கு அறவிட வேண்டிய ரூபா 2,889,512 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	2023 ஆம் ஆண்டிற்கான மின்சாரப் பட்டியல் தொடர்பான மிகைக் கட்டணமாக ரூபா 70,653 தொகை சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டதுடன் மின்சார பட்டியல்களை செலுத்துதல் தாமதம் அடைந்ததற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களை இனங்கண்டு அந்த தொகையை	பட்டியல்கள் கையளிப்பதற்கு உரிய நிலையங்களை எந்த ஒரு நபரும் இல்லாமையினால் மீண்டு இலங்கை மின்சார தனியார் கம்பனி பிரதான அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்ட மின்சாரப் பட்டியல்கள்	பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரை இனங்கண்டு அந்த தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தபால் மூலம் அனுப்பும் போது தாமதம் ஏற்பட்டமையால் மின்சார பட்டியல் செலுத்துதல் சலுகைக் காலத்தின் பின்னர் ஆக இருந்தமையால் தாமதம் ஏற்பட்டு செலுத்தப்பட்டுள்ளது.	
(ஊ)	2022 மார்ச் 18 ஆந் திகதி சபைக்குக் கிடைக்கப் பெற்ற மோட்டார் வாகனம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபைக்கு கையேற்கப்படாது இருந்ததுடன் 2006 மார்ச் 22 ஆந் திகதி சபைக்கு கிடைக்கப் பெற்ற தீயணைப்பு வாகனம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பதிவு செய்யப் பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	கையேற்பதற்கும், கையேற்று பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(எ)	லுனாவ விருந்தினர் விடுதி அமைக்கப்பட்டுள்ள சபைக்குச் சொந்தமான ஹெக்ரேயர் 0.7063 பரப்பளவு உடைய காணி அரசாங்கத்தின் காணிக் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 454) 06 ஆம் பிரிவின் கீழ் சனாபதியினால் எந்த ஒரு கொடுப்பனவும் இன்றி நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு 2021 திசெம்பர் 06 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் இந்த மாடி வீட்டு தொகுதி நிர்மாணிக்கப்பட்டதுடன் தற்போது இந்த வீடுகள் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும் நகர எல்லையில் உள்ள 175 வீடுகளுக்காக ஆதனவரி மதிப்பீடு செய்து இலக்கம் வழங்கி ஆதனவரி அறவிடுவதற்கு இது வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. இதன் காரணமாக இந்த நகர மக்களுக்கு வழங்க வேண்டிய சேவைகள் நகர சபையினால் வழங்கப்படாது இருந்ததுடன் சபைக்கு கிடைக்க வேண்டிய கணிசமான ஆதனவரி வருமானமும் இழக்கப்பட்டிருந்தது.	பதிலளிக்கப்படவில்லை.	ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்து நகர மக்களுக்கு வழங்க வேண்டிய சேவைகளை வழங்குதல் வேண்டும்.
(ஏ)	தனியார் நிறுவனம் ஒன்றில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டு 2022 யூன் 03 ஆந் திகதி களஞ்சியத்தில் கிடைக்கப் பெற்று 864 ரீ சேட்களுக்கு இடையே 2024 திசெம்பர் 27 ஆந் திகதி களஞ்சிய	பதிலளிக்கப்படவில்லை.	வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை சரியாகத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

பின் அட்டை மீதியின் பிரகாரம் 159 ரீ சேட்கள் எஞ்சியிருந்த போதிலும் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் அந்த ரீ சேட் மீதி காண்பிக்கப்படவில்லை.

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	03 மாடிகளை உடைய 89 கடைகளைக் கொண்ட சபைக்குரிய காணி சந்தையின் கீழ் மாடி மழை நாட்களில் நீர் நிரம்புகின்றமை அவதானிக்கப்பட்டது. மேலும் கீழ் மாடியில் உள்ள மலசலகூடம் மிகவும் உடைந்த நிலையில் காணப்பட்டதுடன் அந்த மலசலகூடத்தின் கதவுகள் மற்றும் யன்னல்கள் நிலைகள் பூட்டுக்கள் இன்றி பாதுகாப்பு இன்றிக் காணப்பட்டது. இந்த கீழ் மாடியில் உள்ள பௌத்த மகளிர் சங்கம் மற்றும் மொரட்டுவ அரசாங்க ஓய்வூதியதாரர்களின் சங்கத்திற்கு உரிய 02 கடைகள் நீண்ட காலமாக மூடப்பட்டிருந்தமையாலும் மற்றும் மூன்றாவது மாடியில் உள்ள மண்டபம் முழுமையாக மூடப்பட்டிருந்தமையாலும் சபைக்கு அறவிடுவதற்கு முடியுமாக இருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது. மேலும் அந்த கிளப் ஒன்று சேர்கின்ற நீர் கீழ் மாடிக்கு வழிந்தோடிச் செல்லும் முறையான வேலைத் திட்டம் ஒன்று அமைக்கப்படாமையினால் அந்த நீர் கீழ் மாடிக்கு கசிந்து செல்கின்றமையும் அவதானிக்கப்பட்டது.	உடைந்த நிலையில் உள்ள இந்த கட்டிடத்தை அகற்றி புதிய கட்டிடம் ஒன்றை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.	பழுது பார்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	சபையினால் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த மத்திய சந்தையின் 06 கடைகளுக்காக சபையினால் செலுத்தப்பட்ட ரூபா 69,959 மின்சாரப் பட்டியல் பெறுமதி மீண்டும் கடை உரிமையாளர்களிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் இந்த தொகை பழைய வாடகையாளர்களிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	வாடகையாளர்களிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கழிவுப் பொருள் முகாமைத்துவ விசேட செயற்திட்டத்திற்காக மீள்சுழற்சிப் பொருட்கள் 36 விடயங்களுக்காக இருப்பு சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் 12 விடயங்கள் மாத்திரம் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் டின், தகரம்,	பதிலளிக்கப்படவில்லை.	கழிவுப் பொருள் முறையாக முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும்.

	இரும்பு, அலுமினியம், செப்பு, பிளாஸ்டிக், சிரட்டை, இலத்திரனியல் கழிவுப் பொருட்கள், பியர் கேன்கள் பொருள் விற்பனையில் இருந்து கிடைக்கின்ற பணம் ஊழியர் நலன்புரி விடயங்களுக்காக ஈடுபடுத்தப்படுவதாக குறிப்பிடப்பட்ட போதும் அது தொடர்பாக சபை தீர்மானம் ஒன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் 2024 ஆம் ஆண்டில் மேல் தளத்தில் கழிவுப் பொருள் விற்பனையில் இருந்து கிடைத்த வருமானம் சபையின் நிதியத்திற்கு ஈடுபடுத்துவதற்கோ அல்லது அந்த வருமானத்தை நலன்புரி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியின் அளவினைப் போன்று அந்த நிதி ஒதுக்கும் அடிப்படையிலோ உறுதிப்படுத்தப்படவில்லை.		

3.5 விளைவற்ற/ குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டின் இறுதி வரையில் 12 வாகனங்கள் ஓட்டத்தில் அகற்றப்பட்டதுடன் அந்த வாகனங்களைப் பழுது பார்ப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	பொருத்தமான பிரகாரம் வாகனங்களைப் பழுது பார்ப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	லக்சபத்திய பிரதேசத்தில் சிறுவர் மற்றும் தாய் சேய் பராமரிப்பு நிலையக் கட்டிடத்தின் மேல்மாடி விளைவற்றுக் காணப்பட்டதுடன் ஆக்கபூர்வமான பணிகளுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	சபைக்குச் சொந்தமான சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	த சொய்சா சிங்கிதி பூங்காவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள விளையாட்டு உபகரணங்கள் அமர்வதற்காக தயாரிக்கப்பட்ட பலகை தட்டுக்கள் போன்றவை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது இருந்ததுடன் அதில் காடு வளர்ந்து உபகரணங்கள் துருப்பிடித்துக் காணப்பட்டது.	பதிலளிக்கப்படவில்லை.	சிங்கிதி பூந்தோட்டம் பிரதேச வாசிகளின் பயன்பாட்டிற்காக பொருத்தமான வகையில் பராமரித்துச் செல்லப்படல் வேண்டும்.
(ஈ)	2002 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட வடக்கு மொரட்டுமுல்ல சிறி சாசனவங்ச ஞாபகார்த்த நூலகம் மற்றும் சுதந்திர ஆயுர்வேத மருந்தக மண்டபத்துடன் இரண்டு மாடிக் கட்டிடம் நீண்ட காலம் முதல்	பதிலளிக்கப்படவில்லை.	உரிய கட்டிடம் ஆக்கபூர்வமான பணிகளுக்காக ஈடுபடுத்தப்படல் வேண்டும்.

	பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது இருந்ததுடன் அது துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது.		
(உ)	டிக்சன் ஜே பீரீஸ் விளையாட்டு அரங்கின் விளையாட்டு மண்டபக் கட்டிடம் உடைந்த நிலையில் காணப்பட்டதுடன் அதற்கு அடுத்தால் நிர்மாணிக்கப்பட்டுள்ள சிறுவர் பூங்காவும் விளைவற்றுக் காணப்பட்டது.	பதிலளிக்கப்படவில்லை.	விளையாட்டு மண்டபக் கட்டிடம் மற்றும் சிறுவனர் பூங்கா முறையாகப் பராமரிக்கப்படல் வேண்டும்.
(ஊ)	டக்ளஸ் பிரனாந்து விளையாட்டு அரங்கின் பழைய விளையாட்டு மண்டபக் கட்டிடம் மிகவும் உடைந்த நிலையில் காணப்பட்டதுடன் புதிய விளையாட்டு மண்டபக் கட்டிடம் விளைவற்றுக் காணப்பட்டது.	பதிலளிக்கப்படவில்லை.	உரிய சொத்துக்களை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(எ)	வில்லோராவத்த விளையாட்டு மண்டபக் கட்டிடம் விளைவற்றுக் காணப்பட்டதுடன் அதில் உடைந்த பொருட்கள் குவித்து வைக்கப்பட்டிருந்தது.	பதிலளிக்கப்படவில்லை.	உரிய சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஏ)	அங்குலான சுடலைக் கூடத்தில் சுடலை இயந்திரம் பல வருட காலம் முதல் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டதுடன் பழுது பார்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	பொருத்தமான பிரகாரம் பழுது பார்ப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஐ)	சொய்சா விளையாட்டு அரங்கில் உள்ளக விளையாட்டு அரங்கு 04 வருடங்கள் அளவிலான காலம் முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது இருந்ததுடன் கட்டிடம் அதிகளவில் உடைந்து காணப்பட்டது. இதன் காரணமாக நடை பாதை பயிற்சியளித்தல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்கு முடியாது இருந்தமையால் பிரதேசத்தின் மக்களுக்கு வழங்கக் கூடியதாக இருந்த சேவை இழக்கப்பட்டிருந்தது.	பதிலளிக்கப்படவில்லை.	பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு பிரதேசத்தின் மக்களுக்கு சேவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.6 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டின் போது 140 ஊழியர்களின் உள்ளபடியான பதவிக்கு புறம்பான ஏனைய பதவிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.	பதிலளிக்கப்படவில்லை.	உள்ளபடியான பதவிகளின் கடமைகளைக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	2014 நவம்பர் 12 ஆந் திகதிய இலக்கம் 25/2014 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நிரந்தர நியமனம் வழங்கிய 112 ஊழியர்கள் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சபையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாது இருந்ததுடன் மீளாய்வாண்டிலும் இந்த ஊழியர்களுக்காக சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 57,537,369 செலுத்தப்பட்டிருந்தது. இந்த ஊழியர்களை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாமையின் காரணமாக சம்பள மீளளிப்புச் செய்வதற்கும் முடியாது இருந்தது.	பதிலளிக்கப்படவில்லை.	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	பல வருட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற ஆதன மோசடி மேற்கொள்ளப்பட்ட நட்டமான ரூபா 381,969 மீதி நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. நட்டத்தில் ரூபா 241,749 இந்த ஆதனவரி மோசடிக்குப் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் ஓய்வு பெற்றுச் செல்லும் சந்தர்ப்பத்தில் அறவிடுவதற்கு 2011 பெப்ரவரி 14 ஆந் திகதி ஒழுக்காற்றுக் கட்டளை வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	வேலை நீக்கம் செய்யப்பட்ட இருவரிடம் இருந்து ரூபா 61,068 தொகையும், சேவையை விட்டுச் சென்ற 46 உத்தியோகத்தர்களிடம் இருந்து 715,416 தொகையும், ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் மரணமடைந்த 24 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 1,025,170 தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 1,801,654 கடன் மீதி மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருக்கவில்லை.	வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் இருவரிடம் இருந்து கடன் மீதி ஓய்வூதிய சம்பளம் மற்றும் பிணையாளரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் சேவை விட்டுச் சென்ற 30 ஊழியர்களின் கடன் மீதி மற்றும் மரமடைந்த மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற 15 உத்தியோகத்தர்களின் கடன் மீதி என்பவற்றை பதிவளிப்பதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும் ஏனைய கடன் மீதிகளை	நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	
(உ)	செயலிழந்த கடன் மீதிப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட 103 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 1,505,505 கடன் மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	கடன் மீதியைப் பதிவளிப்பதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளமையால் 2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் மூலம் தீரத்து வைக்கப்படும்.	நிலுவைக் கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் சேவையை விட்டுச் சென்ற 08 ஊழியர்களிடம் இருந்து சம்பளமற்ற விடுமுறைக்காக ரூபா 162,725 தொகை அறவிட வேண்டிக் காணப்பட்டதுடன் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவறு சம்ளம் அற்ற விடுமுறைக்காக அறவிட வேண்டிய மொத்த பெறுமதி ரூபா 1,465,979 ஆகும்.	பதிலளிக்கப்படவில்லை.	நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.7 வாகன முறைமை முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	சபைக்குச் சொந்தமான 24 வாகனங்கள் 2024 ஆம் ஆண்டிற்காக வருமான அனுமதிப் பத்திரம் பெற்றிருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	வருமான அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மாநகர சபைக்குரிய வாகன சாரதிகளுக்கு கையளிக்கும் போது எழுத்து மூல கையளித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	வாகனம் சாரதிகளுக்கு கையளிக்கும் போது எழுத்து மூலம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2021 ஆம் ஆண்டின் போது இடம் பெற்ற வாகன விபத்துக்கள் தொடர்பாக உரிய காப்புறுதி இழப்பீட்டுப் பணம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	உரிய காப்புறுதிப் பணத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	சபையினால் பயன் படுத்தப்படுகின்ற 08 மோட்டார் வாகனங்ளை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	2022 ஆம் ஆண்டின் போது வெளியாரன் கராஜ்க்கு	பதிலளிக்கப்படவில்லை.	பழுது பார்க்கும் நடவடிக்கைகளை

	அனுப்பப்பட்டிருந்த 02 டெக்டர் வண்டிகள் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பழுது பார்க்கப்பட்டிருக்கவில்லை.		விரைவாக மேற்கொள்ளல் வேண்டும்.
(ஊ)	2024 ஆம் ஆண்டின் போது விற்றுத் தீர்க்கப்பட்ட களி வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் உரிய தகவல்கள் நிலையான சொத்துப் பதிவேட்டில் ''டீ'' பகுதியில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	விற்றுத் தீர்ப்பதற்கு உரிய தகவல்கள் நிலையான சொத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்படல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளுராட்சி நிறுவனங்களின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 24 ஆந் திகதிய இலக்கம் 2155/6 என்ற அதிவிசேட வர்த்தமாணியின் மூலம் விதிக்கப்பட்ட மேல் மாகாண மாநகர சபைகளுக்கான நிதி நிர்வாகத்திற்கு உரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான கட்டளை இலக்கம் 08 இன் பிரகாரம் ஒவ்வொரு நிதியாண்டிற்காகவும் நிதிக்கூற்றுக்கள் அடுத்து வரும் நிதியாண்டின் பெப்ரவரி 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2025 ஏப்ரல் 10 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	மேற்படி	குறித்துரைத்த திகதியில் அல்லது அதற்கு முன்னர் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
மொறட்டுவ மாநகர சபையின் 2024 ஆம் ஆண்டின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் 103 செயற்திட்டங்களுக்காக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 31 செயற்திட்டங்கள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.	பதிலளிக்கப்படவில்லை.	பாதீட்டு இலக்கை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	11 செலவின குறியீடுகளில் பாதீடு செய்யப்பட்ட நிதியேற்பாடான ரூபா 44,077,500 தொகையில் ரூபா 27,743,701 பயன்படுத்தப்படாது இருந்ததுடன் 05 செலவின குறியீடுகளில் பாதீடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டை விஞ்சி ரூபா 3,496,218 செலவிடப்பட்டிருந்தது.	பாடசாலை உபகரணங்கள்/ புத்தகங்களைக் கொள்வனவு செய்யும் தேவை காணப்படாது இருந்தமை, சந்தையில் விலைத் தளம்பலின் அடிப்படையில் மதிப்பீடு மேற்கொண்டமை, வீதி பராமரிப்புக்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட மூலப் பொருட்களின் அளவு ஆகக் குறைவடைந்தமை போன்ற விடயங்கள் பாதீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு சேமிப்பிற்கு காரணமாக இருந்தது.	பாதீடு கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படல் வேண்டும்.
(ஆ)	எந்த ஒரு செலவினமும் செய்யப்படாத 11 செலவினத் தலைப்புக்களில் டெங்கு நோய் நிவாரணம் மற்றும் தொற்று நோய்களைத் தடுப்பதற்கான செலவின விடயமும் அவதானிக்கப்பட்டது.	மயான நிலங்களை திருத்தி அமைத்து பராமரிப்பதற்காக கோரிக்கை சமர்ப்பிக்காமை, பதவி நிலை உத்தியோகத்தரின் எரிபொருள் மற்றும் போக்குவரத்துப் படிகள் கோரல் சமர்ப்பிக்கப்படாது இருந்தமையால் செலவினங்களை நிறுத்தி வைத்தல் மற்றும் டெங்கு மற்றும் தொற்று நோய்கள் நிலமை ஏற்படாது இருந்தமை தீயணைப்பு காப்புறு மேவுகைகளுக்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தமை போன்றவற்றின் காரணமாக செலவினங்கள் செய்யாது இருப்பதற்கு காரணமாக இருந்தது.	பாதீடு கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படல் வேண்டும்.
(இ)	07 செலவினக் குறியீடுகளில் மேலதிக நேரக் கொடுப்பனவுகளுக்காக நிதியேற்பாடுகளின் கூட்டுமொத்தம் ரூபா 9,234,000 ஆக இருந்ததுடன் நிதியேற்பாட்டை விஞ்சிய ரூபா 2,953,434 செலவிடப்பட்டிருந்தது.	07 செலவின தலைப்புக்களில் மாத்திரம் மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டுத் தொகையினை விஞ்சி இருந்த போதும் மேலதிக நேரத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்த மதிப்பீட்டுத் தொகையும் ஒட்டுமொத்த செலவினங்களை தீர்க்கக் கூடியதாக இருந்தமையால் ஊழியர் தேவையின் அடிப்படையில் இந்த தலைப்புக்களின் மதிப்பீட்டை விஞ்சி மேலதிக நேரக்	பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்படல் வேண்டும்.

		கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.	
(ஈ)	சபையினால் சீருடைப் படிகளுக்காக பாதீட்டின் பிரகாரம் ரூபா 9,339,000 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான சீருடைச் செலவினம் ரூபா 2,300,191 ஆனமையால் 75 சதவீதம் அதாவது ரூபா 7,038,809 மிகை மதிப்பீடு மேற்கொள்ளப் பட்டிருந்தது.	2024 ஆம் ஆண்டில் சம்பளம் மீளளிப்பு 80 சதவீதத்திற்கு வரையறுக்கப்பட்டமையும் முகாமைத்துவக் குழு அறிக்கையின் பிரகாரம் ஒரு சீருடை தொகுதியைப் பெற்றுக் கொள்வதற்கு பரிந்துரை வழங்கப்பட்டிருந்தமையும் சீருடைகள் மற்றும் காலணிகளின் விலைகள் தொடர்ச்சியாக உயர்வடைந்து சென்றமையால் மதிப்பீடு மேற்கொள்ளும் போது அந்த நிச்சயமற்ற நிலையின் அடிப்படையில் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டது.	பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்படல் வேண்டும்.

4.4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2019 முதல் 2023 வரையான காலப் பகுதிகளுக்காக மாத்திரம் நிலைபேறான அபிவிருத்தித் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்காக அவ்வாறான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வில்லை.	பதிலளிக்கப்படவில்லை	நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைந்து கொள்வதற்காக திட்டம் ஒன்று தயாரிக்கப்படல் வேண்டும்.